**செ. கு. எண்:176** **நாள்: 13.11.2017**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்</u>

<u>அறிக்கை - 13.11.2017</u>

திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள அமராவதி அணையின் பழைய மற்றும் புதிய பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக திருப்பூர் மாவட்டம், **அமராவதி அணையிலிருந்து** தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணையிலிருந்து திருப்பூர் மற்றம் கரூர் மாவட்டங்களிலுள்ள அமராவதி அணையின் பழைய மற்றும் புதிய பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக **15.11.2017 முதல்** தண்ணீர் திறந்துவிட ஆணையிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள **47,117 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**